தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-1-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேங்காய் மற்றும் கொப்பரையை உடனே விற்கவும்

தேங்காய் ஒரு முக்கியமான வணிகப் பயிராகும். தேங்காயில் உள்ள அதிக படியான ஊட்ட சத்தின் காரணமாக முக்கிய உணவுப் பொருளாக கருதப்படுகிறது. உலகளவில் தேங்காய் உற்பத்தியில் இந்தியா மூன்றாம் இடம் வகிக்கிறது.2014-15ம் ஆண்டில் 2.16 மில்லியன் எக்டரில் தென்னை பயிரிடப்பட்டு 1,50,870 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தமிழ்நாடு, 50,747 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்து நாட்டில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டை தொடர்ந்து கேரளா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் தேங்காய் அதிகளவில் உற்பத்தி செய்கின்றன. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர் மற்றும் தேனி ஆகியவைதென்னை சாகுபடி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

தற்போது தேங்காய் குவிண்டாலுக்கு ரூ.1,374 - ரூ.1,650 வரை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில்விற்கப்படுகிறது. சராசரியாக ஒரு தேங்காயின் விலை ரூ.8 முதல் ரூ.10 வரைவிற்கப்படுகிறது. பரவலாக பெய்து வந்த மழையின் காரணமாக தென்னை சாகுபடிசெய்யும் மாவட்டகளில் இருந்துஅதிக வரத்து வரத் துவங்கியுள்ளது. மேலும், மைசூரிலிருந்து வரும் வரத்து டிசம்பர், 2015 முதல் ஜனவரி, 2016 வரை நீடிக்கும். தற்போது,கொப்பரை கிலோவிற்கு ரூ.51- 60 வரை பெருந்துறை கூட்டுறவு விற்பனை மையம் மற்றும் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்கப்படுகிறது.

இச்சூழலில் வருகின்ற மாதங்களில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

ஆய்வுகளின் அடிப்படையில், தரமான தேங்காயின் விலை ஜனவரி–மார்ச், 2016 மாதங்களில் ரூ.10 - 11 வரைகிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. நல்ல தரமான கொப்பரையின் விலை கிலோவிற்கு ரூ.50 முதல் ரூ.53 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. வட இந்தியாவில் தேங்காய் எண்ணெய்க்கு தேவை குறைவாக இருப்பதால் ஜனவரி, 2016க்கு பின் விலை குறைய வாய்ப்பு உள்ளது, எனவே, விவசாயிகள் மேற்கூறிய விலைகளின் அடிப்படையில் தேங்காய் மற்றும் கொப்பரையை உடனே விற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி :-0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்:- 0422-6611284

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்